ENCYCLICAL LETTER

# FRATELLI TUTTI

Of the Holy Father Francis

On fraternity and social friendship

**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்,**
**அரண்வாயல் குப்பம்,**
**திருவள்ளூர் மாவட்டம் - 602 025**

**சுற்று மடல் எண்: 72**

**நாள் : 19.11.2020**




**என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!**

**நெஞ்சம் நிறைந்து அன்போடு உங்களை வாழ்த்துகிறேன்.**

பெருந்தொற்று உலகில் தொடங்கி ஓராண்டாகிவிட்டது.
நம் உலகம் இன்னும் சாதாரண நிலைக்குத் திரும்பவில்லை.
இந்த அசாதாரணச் சூழலோடு வாழக் கற்றுக்கொள்வதில்தான்
நம் அறிவுடைமை இருக்கிறது.
அதற்கான வழிமுறைகளை ஆழ்ந்து சிந்திக்கவும்
குழுவாகக் கண்டுகொள்ளவும்
**இந்தத் திருவருகைக் காலம் நம்மை அழைக்கிறது.**
இன்றைய சூழலுக்கு நம்மைத் தயாரிக்கும் விதமாக அமைந்திருப்பது

**திருத்தந்தையின் சுற்றுமடல்**
‘FRATELLI TUTTI’ ‘**அனைவரும் உடன்பிறந்தோர்**’.

இதனை மையமாகக் கொண்டு
நமது திருவருகைக் காலத்தில் ஆழ்ந்து தியானித்து
திருத்தந்தை காட்டும் வழியில் அடியொற்றி நடக்க முயல்வோம்.
இன்றைய உலகில் நாம் அனைவருமே
அதிகமாகத் தனிமையை உணர்கின்றோம்.
ஆறுபேர் இருக்கும் குழுமத்தில் கூட
அபூர்வமாக பேச்சு சத்தம் சிரிப்பொலி கேட்கிறது.
கேட்கும் பேச்சும் சிரிப்பும் கூட
எல்லோரையும் மகிழ்ச்சிப்படுத்துவதாய் இல்லை.
யாரோ ஒரு சிலரை அது காயப்படுத்துவதாகவே இருக்கிறது.
இப்படி நாம் உண்மையான உறவுகளின் கூடாரத்திலிருந்து
திசைக்கொருவராய் பிரிந்து சென்று கொண்டிருக்கிறோம்.
நம் குழுமங்களில் கூட திறந்திருக்கும் அறைக் கதவுகள் மிகக் குறைவு.
எல்லாம் உள்ளே தாழ்ப்பாளிடப்பட்டே இருக்கின்றன நம் இதயங்களைப் போல.

அச்சம், அவநம்பிக்கை, பதட்டம், Irritation,
கோபம், வெறுப்பு, பாராமுகம், கண்டுகொள்ளா நிலை
இவை வளர்ந்து கொண்டே வருகின்றன.
இவைகள்தான் நம் திருத்தந்தையின் கவலைக்கும் கரிசனைக்கும் காரணமாகின்றன.
நானும் திருத்தந்தையோடு சேர்ந்து இந்த நிலைக்காய் மிகவும் மனம் வருந்துகிறேன்.

**இந்தச் சூழலில்தான் திருத்தந்தை அனைவரும் உடன்பிறந்தோர்,**
**சமுதாய நட்புறவு, மானுட ஒன்றிப்பு உணர்வுக்கான அழைப்பு விடுக்கிறார்.**

**அன்புக்குரியவர்களே!**

**துறவறத்தில் நாம் வாழ்வது மனித சமுதாயத்தின் மனசாட்சியைக் கட்டியெழுப்பவே**

நம்மிலும் நம் குழுமங்களிலும் மனசாட்சி மழுங்கிப்போனால்
வேறு எதைக் கொண்டு உலகைக் கட்டியெழுப்ப இயலும்?
நம் அருகில் இருக்கும் அயலாரின் துன்பங்கள்
நம்மை எந்த விதத்திலும் பாதிப்பதில்லை எனில்
உலகின் நிகழ்வுகள் நம்மைத் தொட இயலாது.
திருத்தந்தை கூறுகிறார்

‘‘**வாழ்க்கை என்பது நம் சுயத்திலிருந்து இடைவிடாமல்**
**அடுத்தவரை நோக்கி விரிந்து கொண்டே செல்வது**’’.

ஆனால் பலசமயங்களில் விரிந்து செல்வதை விடுத்து
சுருங்கிக்கொண்டே செல்கிறோமோ என்ற சிந்தனை
எம்மை கவலை கொள்ளச் செய்கிறது.
நம்மை மட்டுமே நம் தேவைகளைச் சுற்றியே
அமைக்கப்பட்ட வாழ்வு விரைவாகக் கசந்து போகும்.
நம் வாழ்வு தெவிட்டாமல் இனிக்க வேண்டும் எனில்
அது இடைவிடாமல் அடுத்தவரை நோக்கி விரிந்து கொண்டே செல்ல வேண்டும்.
இடைவிடாமல் அடுத்தவரின் நன்மையைப் பற்றியே நாம் சிந்திக்க வேண்டும்.
இல்லை எனில் நமக்கான நன்மைகளும் வறண்டு போகும்.
மனிதர்களோடு மட்டுமல்ல இந்தப் பிரபஞ்சத்தோடும் உறவைக் கட்டியெழுப்ப வேண்டும்
என்ற குரல்கள் உரக்க ஒலிக்கின்றன.
இந்தப் பிரபஞ்சத்தின் அழுகுரல், ஏழைகளின் அழுகுரல்
ஆகியவை இன்று இடைவிடாமல் நம் மனசாட்சியின் கதவைத்
தட்டிக்கொண்டே இருக்கின்றன.

இந்தக் குரல்களுக்கு நாம் செவிமடுக்க வேண்டும் எனில்

**நம்மிலும் நம் உலகிலும் கரிசனைக் கலாச்சாரத்தை**

**(Culture of Care) நாம் உயிர்ப்பிக்க வேண்டும்.**

ஆனால் நாமோ அறிந்தோ அறியாமலோ பலசமயங்களில்
பிரிவினைக் கலாச்சாரத்தைப் பிறப்பிக்கிறோம்.
இது மிக ஆபத்தானது என்பதை உணராமலே வாழ்கிறோம்.
கரிசனைக் கலாச்சாரம் மட்டுமே நம் எல்லோரையும் வாழவைக்கும்.
பிரிவினைக் கலாச்சாரம் கொஞ்சநேரம் பாதுகாப்பாய் இருப்பது போல் தோன்றும்.
ஆனால் அது மேலும் பிரித்து நம்மைத் தனிமைப்படுத்தும்.
கரிசனை கொண்டவர்களால் மட்டும்தான் உலகைக் குணமாக்க முடியும்.

சாதி, இன அடிப்படையில் குழுமங்களில் பிரிவினையை ஏற்படுத்துவோர்,
குழுக்களை உண்டாக்குகிறவர்கள் எச்சரிக்கையாய் இருங்கள்.
கண்களைக் கட்டிக்கொண்டு நாம் தோண்டிய படுகுழிகளை
நோக்கி முன்னேறும் அறியாமையைச் செய்து கொண்டிருக்கிறோம்
என்பதை உணர்ந்து கொள்வோம்.

**அப்படியானால் திருவருகைக் காலத்தில் நாம் செய்ய வேண்டியதென்ன?**

***<u>இதோ நம்முன் நவமணிக்கடிகை – மானுட ஒன்றிப்புக்கான ஔடதம்.</u>***

- ❖ முதலில் நாம் யாரோடு நெருங்கிய உறவு வைத்திருக்கிறோம் என்று பார்ப்போம். ஒருவேளை ஒரே சாதியைச் சார்ந்தவராக மட்டுமே ஒரு Group – ஆக இருப்பதால் அடுத்தவர் மனம் பாதிப்படைகிறது. எனவே அடுத்தவர்கள் யாராவது ஒருவரை அல்லது ஒரு சிலரை உங்களோடு இந்தத் திருவருகைக் காலத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள். இதனால் சாதிய மேலாண்மையை உடைக்கலாம்.
- ❖ யார் மீதாவது அடிக்கடி எரிச்சல் ஏற்பட்டால் அவர்களைப் பற்றி 10 நேர்மறையான காரியங்களை உங்கள் Diary ல் எழுதிப் பாருங்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் மீது நல்லெண்ணம் உருவாகுவதை உணர்வீர்கள்.
- ❖ உங்களைப் பற்றி எப்போதுமே தவறாகக் கருத்து சொல்பவர்கள், தவறான கருத்தை மற்றவர்களிடத்தில் ஏற்படுத்த முயல்கிறவர்களைப்பற்றி பொதுவில் பாராட்டிப் பேசுங்கள். அவர்களும் உங்களைப் பற்றி நல்லது பேச ஆரம்பிப்பார்கள்.
- ❖ உரையாடுகையில் நான் சொல்வதுதான் சரி என்று அடித்துப் பேசுவது, குரலை உயர்த்திக் கத்துவது, அடுத்தவர் பேசுவதைச் சட்டை செய்யாமல் இருப்பது போன்றவை

உங்கள் நன்மதிப்பைக் கெடுத்துவிடும். அமைதியாகப் பேசுவது, அன்பாகக் கரிசனையான குரலில் மரியாதையோடு பேசுவதை இந்தத் திருவருகைக் காலம் முழுவதும் அமுல்படுத்துவோம். நமது ஆளுமை மேம்படும்.

- ❖ சிலர் தான் மட்டுமே உண்மையானவர், தான் மட்டுமே பணத்தை நேர்மையாகக் கையாள்பவர் என்ற மிகத் தவறான எண்ணம் கொண்டிருக்கிறோம். யார் அடுத்தவரை சந்தேகப்படுகிறார்களோ அவர்கள்தான் நேர்மை இல்லாதவர் தவறு செய்கிறவர்கள். என்பதை மறக்க வேண்டாம். நேர்மையானவர்கள் ஒருபோதும் அடுத்தவரை சந்தேகிக்க மாட்டார்கள். யாரையும் சந்தேகப்படாமலும் அந்த கருத்தைப் பரப்பாமலும் இந்த திருவருகைக் காலம் முழுவதும் இருப்போம். அப்போது நம் குழுமத்தில் அமைதியான காற்று வீசும்.
- ❖ நமது குழுமங்களில் உணவறையில் அனைவரும் கூடியிருக்கும் இடங்களில் மகிழ்ச்சியான உரையாடல்களைத் தொடங்குவோம். குழுமத்தில் உள்ள அனைவரும் இணைந்து பேசி சிரிப்பதற்கு திருவருகைக் காலத்தில் அன்றாடம் நாம் முன்முயற்சி எடுப்போம். நம் குழுமத்தின் அமைதிப் புறாவாக நாம் மாறுவோம்.
- ❖ யாரைப்பற்றியும் பொதுவிலோ, தனியாகவோ குறை கூறுவதை இக்காலத்தில் கண்டிப்பாகத் தவிர்ப்போம். மலர்ந்த முகத்தோடு இனிய வார்த்தைகளைப் பேசுவோராய் இருப்போம். நாம் அனைவராலும் விரும்பப்படுவோம்.
- ❖ ஒரு நாளைக்கு 10 முறையாவது கடவுளின் பராமரிப்பைப் பற்றி நம் வாழ்வில் அவர் ஆற்றும் நன்மைகளைப் பற்றி நன்றியறிந்த உணர்வோடு பேசுவோம். நாம் நிறைவானவர்களாக வாழ்வோம்.
- ❖ இத்திருவருகைக்காலத்தில் நம் குழுமத்தில் உள்ள சகோதரிகளிடம் குறைந்தபட்சம் 5 நிமிடமாவது தனியாக உரையாடி அவரோடு வாழ்வது இறைவன் கொடுத்த கொடை என்பதை வெளிப்படுத்துவோம். அனைவரும் நம் சகோதரராய் ஆவர்.

**'*CHARITY BEGINS AT HOME'* என்பதற்கேற்ப 'FRATELLI TUTTI' – யை நம் குழுமத்திலிருந்து வாழத் தொடங்குவோம். இந்தத் திருவருகைக்காலத்தை அர்த்தமுள்ள வகையில் வாழ்வாக்குவோம்.**

***சகோதரிகள் கவனிக்க!***

- ➢ நம் உலகம் மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் திணறுகிறது. அதை உணர்ந்து கொள்ள இயலாதவர்களாய் நாம் வாழ்கிறோம். குறைந்தபட்சம் திருவருகைக் காலத்தில் நமது Budget - இல் இருந்து அவசியமற்ற செலவுகளைக் குறைத்து Christmas -க்காக நம்மைச் சுற்றியுள்ள ஏழைகளுக்கு உதவ முயல்வோம். அதற்காகக் குழுமத்தில் திட்டமிடுவோம்.

- **திருத்தந்தையின் 'அனைவரும் உடன்பிறந்தோர்' திருமடலைப் பற்றிய Online Webinar உங்களுக்கு ஏற்பாடு செய்கிறோம்.**

Webinar நாட்கள் : December 13th and 16th

Resource Person : Fr. Joe Arun SJ

December 13th and 16th இரு நாட்களும் அதே Seminar நடைபெறும்.

உங்களது குழுமத்துச் சகோதரிகள் ஏதாவது ஒன்றில் கலந்து கொள்ளும்படி இல்லத் தலைமைச் சகோதரிகள் ஏற்பாடு செய்யுங்கள்.

இது Online Webinar என்பதால் தேவையான ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்து கொள்ளுங்கள்.

இதற்கு முன்னோட்டமாக 12ஆம் தேதி Webinar முன்னோட்டம் நடைபெறும்.

அனைவரும் கலந்து கொண்டு **கரிசனைக் கலாச்சாரத்தை வாழ்வாக்குவோம்.**

- **அடைக்கலத்தூது:**

Pandemic காரணமாக அடைக்கலத்தூது ஏப்ரல் முதல் வெளிவரவில்லை என்பது நாம் அனைவரும் அறிந்தது. ஏப்ரல் முதல் நடந்த முக்கிய நிகழ்வுகளை மீண்டுமாக தலைமையகத்திற்கு fbsgeneralate@gmail.com க்கு மின்னஞ்சல் வழியாக அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன்.

- **DIRECTORY:**

2016-ன் Directory ஐப் புதுப்பிக்க இருக்கிறோம். எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள Directory க்கான படிவத்தினை உடனே பூர்த்தி செய்து மாநிலங்களின் இல்லங்கள், மாநிலத் தலைமைச் சகோதரிக்கும் தலைமையக நேரடிப் பார்வையில் உள்ள இல்லங்கள் terenciafbs@gmail.com மின்னஞ்சலுக்கும் அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Directory- க்கான படிவத்தை நிரப்பும் போது மாவட்டங்கள்/ மறை மாநிலங்கள் மாறியிருக்கும் பட்சத்தில் அவை தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

**இனிமேல் Directory ல் சகோதரிகளின் பெயர் மற்றும் பிறந்த தேதி Certificates/ Aadhar Card இல் உள்ளபடி அச்சிடப்படுகிறது.** எனவே தயவுகூர்ந்து உங்கள் **Certificate பெயரை சரியான Spelling உடன் எழுதி அனுப்பவும்.**

Institutions பற்றிய Particulars எழுதும்போது **அந்த நிறுவனம் எப்போது தொடங்கப்பட்டது, எப்போது உயர்நிலை / மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது. அதற்கான அரசாணை எண் மற்றும் அரசு உதவிபெறும் / சுயநிதி போன்ற அம்சங்கள் தெளிவாகக் குறிக்கப்பட வேண்டும்.**

**சபைத் தலைமை அன்னையின் உத்தேசப் பணித்திட்டம்**


டிசம்பர் 01–10 சூழலுக்கு ஏற்ப புதுக்கோட்டை மாவட்ட இல்லங்கள் பார்வையிடப்படும்.

டிசம்பர் 11–25 தலைமையகம்

டிசம்பர் 26–31 புகுமுகத் துறவியர் பார்வை – பொது ஆலோசனைக் குழு அமர்வு

**திருத்தந்தையின் 'FRATELLI TUTTI' – யை வாழ்வாக்குவதன் வழி**

**உலகை நாம் வாழும் உறவின் வீடாக மாற்றுவோம்.**




அக ஒளிப்பயணத்தில் தோழமையுடன்

Sr. Maria Philomi FBS

சபைத் தலைமை அன்னை